**துணை ஆணையர் (மாவ)(முகூபொ), சரகம்-12 அவர்களின் செயல்முறைகள்**

பிறப்பிப்பவர் - திருமதி. அ. ஜெயசாந்தி, பி.இ.,

இடம் - எண். 38/ 9, செட்டி தெரு, திருப்பெரும்புதூர் - 602 105

துணை ஆணையர், (வணிக வரிகள்)
3 JUL 2019
577

**நக.1823 / 2016 / அ1** நாள் - 26.06.2019.

பொருள் - பொதுப்பணிகள் - வணிக வரித் துறை - துணை ஆணையர் (வவ) அலுவலகம், சரகம்-12 - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி IV-ல் அடங்கிய 2015-16-ம் ஆண்டிற்கான தட்டச்சர் பணி - முதல் கட்டம் - திருமதி. ந. சுமதி, தட்டச்சர், உதவி ஆணையர்(மாவ), திருக்கழுக்குன்றம் வரிவிதிப்பு வட்டம் - பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை -
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண் 5658/ PSD-D1/ 2017, நாள் - 03.10.2017.
2. இணை ஆணையர் (மாவ) சென்னை (தெற்கு) கோட்டம், அவர்களின் நக.5395/ 2017/அ2, நாள் - 17.10.2017.
3. துணை ஆணையர்(மாவ), சரகம் - 11 அவர்களின் செமுநக. 2770/ 2017/ அ1, நாள் 17.11.2017.
4. இணை ஆணையர் (மாவ) சென்னை (தெற்கு) கோட்டம், அவர்களின் செ.மு.நக.2518/ 2017/அ2, நாள் - 26.04.2018.

----------

**ஆணை -**

83

திருமதி. ந. சுமதி, தட்டச்சர், உதவி ஆணையர்(மாவ), திருக்கழுக்குன்றம் வரிவிதிப்பு வட்டம் என்பவர் பார்வை 1-ல் காணும் கடித்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015-16-ஆம் ஆண்டுக்கான தொகுதி-IV தேர்வில் தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் இணை ஆணையர்(வவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி துணை ஆணையர்(மாவ), சரகம்-11 அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்பு பார்வை 3-ல் காணும் துணை ஆணையர் (வவ), சரகம் - 11 அவர்களின் செயல்முறைகளின்படி உதவி ஆணையர்(மாவ), கோயம்பேடு வரிவிதிப்பு வட்டம் அலுவலகத்தில் தட்டச்சராக 29.11.2017 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பார்வை 4ல் காணும் இணை ஆணையர்(மாவ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி தனியாளர் இச்சரகத்திற்கு உட்பட்ட உதவி ஆணையர்(மாவ), திருக்கழுக்குன்றம் வரிவிதிப்பு வட்டம் அலுவலகத்திற்கு பணி மாறுதல் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். தனியாளருக்கு தற்காலிக தெரிவு உறுதி செய்யப்பட்டதின் அடிப்படையில், தனியாளரின் பணி அவர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாளன்று பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.